செ.வெ.எண்.61 நாள்.21.10.2017.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கூடங்குளம் அணுமின் நிலைய பகுதியில் பேரிடர் மேலாண்மை ஒத்திகை நடத்துவது தொடர்பான முன்னேற்பாடு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கூடங்குளம் அணுமின் நிலைய பகுதியில் 26.11.2017 அன்று பேரிடர் மேலாண்மை ஒத்திகை நடத்துவது தொடர்பான முன்னேற்பாடு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (21.10.2017) நடைபெற்றது.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளத்தில் அதிநவீன முறையில் அமைக்கப்பட்டுள்ள அணுமின் நிலையத்தில் இயற்கை சீற்றம் மற்றும் மனித தவறுகளால் ஏற்படும் பேரிடர் காலங்களில் கூடங்குளத்தினை சுற்றியுள்ள பகுதிகளில் அணுமின் நிலையத்துடன் இணைந்து மாவட்ட நிர்வாகத்தின் மூலம் செய்ய வேண்டிய பேரிடர் மேலாண்மை குறித்த ஒத்திகை ஏற்கனவே இரண்டு முறை நடத்தப்பட்டுள்ளது. அணுமின் நிலையத்திலிருந்து 1.6 கி.மீ. தூரம், 5 கி.மீ. தூரம், 16 கி.மீ. தூரம் சுற்றுப் பகுதிகள் வரை பேரிடர் காலங்களில் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பொதுமக்கள் மற்றும் அலுவலர்கள் பயிற்சி பெறும் வகையில் ஒத்திகை நடத்தப்படவுள்ளது. இந்த ஒத்திகை இம்முறை பரமேஸ்வரபுரம் பகுதியில் நடத்தப்படவுள்ளது. ஒத்திகையின் போது, காவல் துறையின் அறிவிப்பு, அவசரகால குழுக்களின் மூலம் அயோடின் மாத்திரை வழங்குதல், (ஒத்திகையின் போது சாக்லேட்) மக்களை அப்புறப்படுத்துதல் போன்ற நிகழ்வுகள் அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். முன்னதாகவே, இப்பகுதி மக்களுக்கு பேரிடர் மேலாண்மை ஒத்திகை குறித்து தெரிவிக்க வேண்டும். 26.11.2017 அன்று பரமேஸ்வரபுரம் பகுதியில் நடைபெறும் பேரிடர் மேலாண்மை ஒத்திகையை அனைத்து துறையினரும் ஒருங்கிணைந்து சிறப்பாக செய்திட வேண்டுமென தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், கூடுதல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.உதயகுமார், கூடங்குளம் அணுமின் நிலைய அறிவியில் அலுவலர் திரு.பண்டாரம், மனிதவள மேலாளர் திரு.அருண்மாறன், தரஉறுதிப்பாடு கண்காணிப்பாளர் திரு.ரமேஷ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.